RESEARCH ARTICLE

IOR PRESS
INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt22140

OPEN ACCESS

# உளவியல் நோக்கில் வெய்யோன் புதினம்

சு. மலர்விழி [அ, *], வெ. பானுமதி [அ]

[அ] தமிழ்த்துறை, ஸ்ரீசாரதா மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சேலம் -16, இந்தியா

# Psychological perspective of the Veyon Novel

S. Malarvizhi [a, *], V. Banumathi [a]

[a] Department of Tamil, Sri Sarada women's College (Autonomous), Salem-16, India.

* Corresponding Author: malarvizhissw@gmail.com

Received: 27-11-2021
Revised: 18-01-2022
Accepted: 23-01-2022
Published: 30-01-2022

Check for updates

**ABSTRACT**

Although there is a psychological perspective in literary work and creativity, it was only in the twentieth century that scholars paid special attention to psychological concepts. The mind is the fertile ground for the thoughts and ideas of life. The mind is a microcosm containing many energies. In the vast field of the human mind called the mind, there are deep areas of the mind such as autonomy, helplessness, jealousy, and cruelty.

**Keywords:** Jayakanthan, Short stories, Society, Inequality

## முன்னுரை

இலக்கியம் வாழ்வின் இலக்கினை இயம்புவது. மக்களின் வாழ்க்கையை எடுத்துச்சொல்லும் இலக்கியங்கள், அம்மக்களின் மனவுணர்வினையும் புலப் படுத்துகிறது. அதனடிப்படையில் உளவியல் துறைக்கும், இலக்கியத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. வாழ்க்கையைப் பிரதிபலிப்பதே உண்மையான இலக்கியம் ஆகும்;. வெய்யோன் புதினத்தில் ஒவ்வொரு கதாப்பாத்திரத்தின் ஆழ் மன உணர்வுகளை எவ்வாறு தன் சொல்லில் வடித்துள்ளார் என்பதை இக்கட்டுரையின் வழி காண்போம்.

## தமிழ் இலக்கியங்களில் உளவியல்

தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள், அறஇலக்கியம், காப்பிய இலக்கியம், பக்தி இலக்கியம், சிற்றிலக்கியம், சிறுகதை இலக்கியம், புதின இலக்கியம், கவிதை இலக்கியம், நாட்டார் இலக்கியம் என அனைத்து இலக்கியங்களிலும் உளவியல் கூறுகள் இருப்பதற்கான சான்றுகள் சில மட்டும் இங்கு சுட்டப் படுகின்றன. தமிழில் முதலில் கிடைக்கப்பெற்ற இலக்கண நூல் தொல்காப்பியம். பொருளதிகாரத்தில் தமிழ் மக்களின் வாழ்வியலை விளக்குகிறது. மனித உயிர்களின் அறிவு பற்றி பேசுகையில் ஆறாவது அறிவு மனிதர்களுக்கு உரியது, அது மனம் தொடர்பானது என்று எடுத்துக் காட்டியுள்ளார் தொல்காப்பியர்.

“மனத்தின் எண்ணி மாசு அறத்தெரிந்து கொண்டு. (தொல்காப்பியர், பொருளதிகாரம், நூ.எ. 655.)

மனம் இருப்பதனால் மக்கள் என்றழைக்கப்படுகிறார்கள் என்பதை இந்நூற்பாக்கள் வெளிப்படுத்துகின்றன. மனிதர்களின் நிறைவேறாத எண்ணங்களின் வெளிப்பாடே கனவு. கனவு பற்றிய குறிப்பும் தொல்காப்பியத்தில் இடம்பெற்றிருக்கிறது.

“கண்துயில் மறுத்தல் கனவொடு மயங்கல்”(தொல்காப்பியர், பொருளதிகாரம், நூ.எ . 266.)

கனவு தூக்கத்தின் இடையீடு என்றும், காதல் மிகும் போது தன்நிலை மறந்து அரற்றும் தலைவியின் மனநிலை இங்கு புலப்படுகிறது. இதன் மூலம் இன்றைய உளவியல் கொள்கையுடன் தொல்காப்பியரின் கருத்துக்கள் ஒத்துப் போவதை அறியமுடிகிறது.

## சங்க இலக்கியத்தில் உளவியல்

சங்க இலக்கியத்திற்குப் பிறிதொரு பெயர் சூட்டுக என்று கேட்டால் தயங்காமல் உளவியல் இலக்கியம் எனக் குறிப்பிடலாம். அகத்திணைப் பாடல்கள் நூற்றுக்கு நூறும், புறத்திணைப் பாடல்கள் நூற்றுக்கு எழுபந்தைந்தும் உளவியல் பற்றியனவேயாகும்.” தமிழண்ணல், சங்க இலக்கிய ஒப்பீடு (இலக்கிய கொள்கைகள்), ப.138. என்றுரைத்துள்ளார் தமிழண்ணல்.

குறுந்தொகையில் காமம் மிகுதியில் தலைவி அரற்றுவதாக ஔவையார் படைத்த இப்பாடல், அக்காலப் பெண்களின் மனநிலையை வெளிப்படுத்துகிறது.

“முட்டுவேன் கொல்? தாக்குவேன் கொல்

ஓரேன் யானும் ஓர் பெற்றி மேலிட்டு

ஆஅ! ஒல் எனக் கூவுவேன் கொல் ?

அலமரல் அசைவளி அலைப்ப என்

உயவு நோய் அறியாது, துஞ்சும் ஊர்க்கே”ஔவையார், குறுந்தொகை, (பாலை) பா.எ.28

இன்பத்தை ஏற்றுக் கொள்ளும் மனிதன், துன்பத்தை ஏற்றுக்கொள்வதில்லை. இன்பமும் துன்பமும் விரவியதுதான் மனித வாழ்க்கையென்று மானுடத்தின் இவ் உள்ளக்கிடக்கையை மருங்கூர்ப் பாகைச்சாத்தன்,

“இன்பமும் இடும்பையும் புணர்வும் பிரிவும்

நண்பகல் அமையமும் இரவும் போல

வேறுவேறு இயல ஆகி மாறெதிர்ந்து”(அகநானூறு, பா.எ.327.)

என்ற பாடல் மூலம் எடுத்துக் காட்டியுள்ளார்.

## நனவோடை உத்தி

மனிதர்கள் உணர்ச்சிவசப்படுபவர்கள். வாழ்வின் தளத்தில் இன்ன விதமாகத்தான் செயல்புரிய வேண்டும் என்று திட்டவட்டமாக யாராலும் கணித்து வாழ முடியாது. இந்த நிலையைத்தான் வாழ்க்கை பல்வேறு தளங்களில் நிரூபித்துக்கொண்டிருக்கிறது. இவ்வாழ்வில் கண்ணுக்குத் தெரியாத ஆழமான மன உணர்வுகளையும் அதன் செயல்பாடுகளையும் சொல்லில் வடிக்க கையாண்ட அமைப்புகளில் நனவோடை உத்தி குறிப்பிடத்தகுந்தது. முக்காலத்தை இணைக்கும் ஆற்றல் நனவோடைக்கு உண்டு. நனவோடையில் மனித மனவிகாரங்கள் மறைவின்றி, தடையின்றி உணர்த்தப்படும் என்பதை வெய்யோன் புதினம் மூலம் அறியலாம்.

ஜமதகினி முனிவர் இளைய மைந்தன் பரசுராமன். பரசுராமனின் அன்னை ரேனுகை ஒரு நாள் காலை வேள்விக்கு நீர் கொண்டுவரச் சென்றாள். அங்குக் கந்தர்வனை கண்டாள். காதல்

கொண்டாள். இதனால் சினம் கொண்ட முனிவர் அவள் தலை கொய்யும்படி ஆணையிட்டார். தந்தையின்; சொல்லை ஏற்று அன்னைமுன் வந்து நின்றான். அவள் விழிகளை நோக்கினாhன். மனத்தை கனவுக்குள் அழுத்திக் கொண்டு மின்னலாய் வாலை சுழற்றி தலையைக் கொய்தான். அவன் தந்தை கைநீட்டி வந்து தோள் தழுவினார். மகனே நீ வென்றுவிட்டாய் என்றார். இவ்வாறே இனி உன் வாழ்க்கை பயணம் தொடரட்டும் என்றார். இதனை,

'ஆணை, தந்தையே' என்று தலைவணங்கி, குருதிவழிந்து கருமை கொள்ளத் தொடங்கிய வாளுடன் அவன் திரும்பிச்சென்றான். 'அந்த வாள் உன்னுடன் இருக்கட்டும்' என்று தந்தை அவனுக்குப் பின்னால் ஆணையிட்டார் 'ஏனென்றால் அதுவே இனி உன் பாதை. வேதமல்ல வெங்குருதியே இனி உன்னைச் சூழ்ந்திருக்கும். ஓம் அவ்வாறே ஆகுக

தயங்காத காலடிகளின் ஓசை சீரான தாளமென தன்னைச் சூழ்ந்திருந்த காற்றில் இலைமுகில்குவைகளுக்கு மேல் முட்டி எதிரொலிக்க நடந்து ஆற்றை அடைந்தான். அந்த வாளை நீரில் அமிழ்த்தி முழந்தாளிட்டு அமர்ந்து கழுவத்தொடங்கினான். கரைந்து கரைந்து செந்நிறம் கொண்டது நீலத்தெளிநீர். அவ்வாள் ஒரு குருதிக் கட்டியென செம்புனல்பெருக்கை எழுப்பியது. அதன் ஆணிப் பொருத்துகளுக்குள்ளிருந்து ஆழ்புண் என குருதி ஊறி வருவது போல் இருந்தது. கை நகங்களால் சுரண்டியும் மென்மணல்கொண்டு உரசியும் அவன் கழுவக் கழுவ குருதி பெருகி வந்தது.

பின் ஏதோ எண்ணி அவன் விழிதூக்கி நோக்கியபோது அப்பெருநதி செங்குருதியின் அலைப்பெருக்கென விழிநிறைத்து சென்றுகொண்டிருக்கக் கண்டான். அஞ்சி எழுந்து மூன்றடி பின்னால் நடந்து பதறும் கைகளுடன் நின்றவன் நோக்கில் அச்செம்பரப்பில் எழுந்தது அவள் நிழல். அவ்விறுதி நோக்கின் அழிவிலாக் கணம்.(வெய்யோன், ப.15)

என்ற கூற்றின் மூலம் அப்பெருநதியில் ஓடிய செந்நிறத்தில் தாயின் நிழல் தெரிவதையும் நனவோடை உத்திமூலம் தெளிவுபடுத்தியுள்ளார்.

சசாங்கர் கர்ணனிடம் வெந்நீர்க் குளியல் மூலம் உடல் அழுக்குகளை நீக்க முடியும் என்கிறார். அதற்குக் கர்ணன் உள்ளத்தின் அழுக்குகளை வெளிக் கொணர வழி உள்ளதா என்று கேட்கிறார். மனம் உணரும் வலியை போக்குவது இறை வழிபாடு என்கிறார். இது ஆழ்மண உணர்வுகளைத் தனது சொல்லில் வடிப்பதை,

“சசாங்கர் முன்னால் ஓடி கர்ணனிடம் "தாங்கள் ஆவிநீராட்டுகொண்டு பல நாட்களாகின்றன அரசே" என்றார். "வெந்நீராட்டுதான் ஒவ்வொரு நாளும் நிகழ்கிறதே" என்றான் கர்ணன். "நீராட்டுகள் அனைத்தும் தோலைக் கழுவுபவை ஆவிநீராட்டு தோலுக்குள் சுரந்த அழுக்குகளை வெளிக்கொணர்ந்து கழுவுவதற்கு" என்றார். "நன்று" என்றபடி காணன் கைதூக்கி நிற்க, பிராதர் அவன் ஆடைகளைக் களைந்தார்.

கர்ணன் "சசாங்கரே உள்ளத்தின் அழுக்குகளை வெளிக்கொணரும் நீராட்டு என ஒன்று உண்டா?" என்றான். "உண்டு" என அவர் புன்னகையுடன் சொன்னார். "அதை இறைவழிபாடென்பார்கள். உகந்த தெய்வத்தின் முன் உள்ளும் புறமும் ஒன்றென நிற்றல், கண்ணீரென ஒழுகி கரந்தவை வெளிச்சென்று மறையுமென்பார்கள்!" மேலது, ப.52 என்ற கூற்றின் மூலம் அறியலாம்.

குந்திதேவிகுப் பிறந்த கர்ணன், அதிரதன் இராதையால் தத்தெடுக்கப்பட்டு வளர்க்கப்படுகிறான். துரியோதனன் மூலம் அங்கநாட்டு அரசனாக்கப்படுகிறான்.

“ராதை நான் உன் தந்தையிடம் உரைக்கிறேன்" என்றாள் ராதை கர்ணன் தன்னுன் என “இந்த மணிமுடியை எக்கணம் நான் ஏற்க சித்தமானேன்? என் ஆணவ நிறைவுக்கு இது தேவைப்பட்டதா என்ன?" என்றான். “ஆணவத்தால்தான் வீரர்கள் உருவாகிறார்கள்" என்றாள் ராதை சிறுமைகளை சந்தித்து சலித்துவிட்டேன் அன்னையே. மீண்டும் ஒன்று என்முன் வருகையில் அஞ்சுகிறேன் நோயுற்றவனுக்கு சிறுமுள்கூட இறப்புருவாகத் தெரிவது போல" என்று கர்ணன் பெருமூச்சுவிட்டான். 'இதை நான் எப்படிக் கடந்துசெல்வேன் என்றே தெரியவில்லை."

இது உன் தந்தையின் சிறு நிலையழிவு மட்டுமே. பகற்கனவு காணும் எளிய மனிதர் அவர். நீ அறிவாய், எளிய மனிதர்களே மிகுதியாக பகற்கனவு காண்கிறார்கள். ஏனெனில் அவர்கள் அடைய இயலாததவையே இவ்வுலகில் அதிகம். அவரது பகற்கனவில் பல ஆயிரம் மடங்கு பேருரு கொண்டிருக்கக்கூடும். அவ்வண்ணமே அவர் வாழ்க்கை முடிந்திருந்தால் அதில் பிழை இருந்திருக்காது. அக்கனவுகளில் ஒன்று நனவாகியது. முடிகொண்ட மைந்தனின் தந்தையானார். அதை பொத்திப்பிடித்து அமர்ந்திருக்கிறார்" என்றாள் ராதை.

'அன்னையே, நான் அறிந்த நிலைமதியாளர்களில் ஒருவர் நீங்கள். நீங்கள் அறியாத மானுட உள்ளமில்லை. என் நெஞ்சில் நீங்கள் அறியாத ஒருசொல்லும் இல்லை" என்றான். "நான் அவரிடம் சொல்கிறேன். அவர் அஞ்சுவது போல நீ ஷத்ரிய அரசி ஒருத்தியை அடைந்தால் அவளுக்குரிய அரசனாக உன்னை மாற்றிக்கொள்ள மாட்டாய். அரசன் என்று அமர்ந்து உன் தந்தையை அயலவன் என்று எண்ணவும் மாட்டாய். அதை அவரிடம் சொல்லிப் புரியவைத்தால் மட்டும் போதும்." ராதை சிரித்து "ஆனால் எளியவர் என்றாலும் உன் தந்தை சொன்னதில் ஒருசொல் உண்மை" என்றாள்.( மேலது, ப.77) என்ற கூற்றில் நனவாகிய தன்மையை ஆசிரியர் பயன்படுத்தியுள்ளார்.

**கனவு**

உளவியலில் கனவு பற்றிய விளக்கங்களை அளித்துள்ள ஃப்ராய்டு மனித உள்ளங்களின் நடத்தைகளையும், போக்குகளையும் கனவு வாயிலாக வெளிப்படுத்த முடியும் எனத் திடமாக நம்பினார். “கனவுகள் எவ்வளவு முட்டாள்தனமாக இருக்கிறதோ அந்த அளவுக்கு முக்கியமான விசயங்களை உள்ளடக்கி இருக்கும்”(ஆனந்த விகடன், 13.01.10 இதமுடன் இணைப்பு “கனவு விகடன், ப.137.) என்பது ஃப்ராய்டின் வாதம், உள்ளத்தில் அடக்கப்பட்ட உணர்வுகள் பல்வேறு நிலைகளில் வெளிப் படுவதுண்டு. அவ் வடக்கப் பட்ட ஆசைகள் புனைவு உருத்தோற்றங்களோடு வெளிப்படும். இவற்றையே கனவு என்கிறார் ஃப்ராய்டு. ஒடுக்கப்பட்ட ஆசைகள் இவ்வாறு வெளியாவதால் மனம் அமைதி அடைகிறது.

கனவுகள் இருநிலைகளிலிருந்து வெளிப் படுகின்றன.

1. மறையகம் (Latent Dream)

2, வெளியகம் (Manifest Dream)

கனவு மூலம் உள்ளுக்குள் உறைந்து கிடக்கும் ஆசையின் பொருளமைப்பே மறையகம். ஆசையின் பொருளமைப்பு மாயக் காட்சியாக திரித்துக்காட்டப்படுவது வெளியகம்.

உளம் சார்ந்த உள்ளடக்க நிலைக்கேற்பவே கனவு வெளிப்படும். கனவு முற்றிலும் தனிநபர் அனுபவத்திற்கு மட்டுமே உரியதாகிறது. இக்கனவுகள் ஒடுக்கப்படும் ஆசைகளுக்கான மாற்றுமுறை நிறைவாக்கமாகத் திகழ்கின்றன. இதன் மூலமாகக் குற்ற உணர்ச்சியிலிருந்தும், இச்சைகளிலிருந்தும் விடுபட்டு மன அமைதி பெறுகிறான் மனிதன்.

## மடைமாற்றம்

தனிநபர் போக்கை நம்பிக்கை வறட்சி ஆட்கொண்டு வீழ்த்துகிறது. கடந்த கால நினைவுகள், நிகழ்கால அவலங்கள், எதிர்கால வாழ்வியல் கவலைகள், தனிமை இவற்றிலிருந்து மனித மனம் தப்பிக்க மற்றொன்றைத் தேடுகிறது. இதனை மடைமாற்றம் என்கின்றனர் உளவியலர்.

“சமூக அளவில் ஒத்துக்கொள்ளப் படமுடியா உணர்ச்சிகளை, உள்ளடக்கிக் கொண்டு அதனை நிறைவு செய்யும் வகையில் சமூகம் ஏற்றுக் கொள்கின்ற உயர்செயல்களில் மடைமாற்றம் செய்து கொள்ளுதல் உயர் மடைமாற்றம்”சீனிச்சாமி, து., தமிழ் நாவல்களில் உளச்சித்தரிப்பு, ப.20. என்று கூறியுள்ளார் சீனிச்சாமி.

மது என்னும் மாயத்தை கண்டடைந்த மூதாதை ஒரு மன்னனாகவே இருக்ககவேண்டும். ஏனென்றால் நாள்தோறும் அவன் மேல் வந்து விழும் பழியையும் புகழ் மொழியையும் மறந்து இரவில் நன்கு தூங்க அது அவனுக்குத் தேவைப்பட்டிருக்கும் என்று கூறி,

“ஒரு குவளை மது போதும் சிவதரே, என்னைத் திரட்டிக்கொள்வேன்" என்றான் கர்ணன். சிவதர் அது தேவையில்லை அரசே. தாங்கள் அங்கு இழிவுபடுத்தப்படுவீர்களோ என்ற ஐயம் எனக்கு இருக்கிறது. மதுவுண்டால் அதுவே அவர்களுக்கு ஒரு தூண்டுதல் என்று ஆகும்" என்றார். கர்ணன் “நீர் சொல்வது சரிதான். பார்ப்போம்" என்றான். திரும்பி சால்வையை எடுத்து அணிந்துகொண்டு “இன்றைய நாள் மிக நீண்டது. இது எப்போது அணையும் என்றிருக்கிறது" என்றான். சிவதர் “இரவு ஒரு கருஞ்சிறகுப்பறவை என்பது சூதர் சொல்" என்றார். அவன் அதை நோக்கவில்லை.”( வெய்யோன் , ப.123) என்ற கூற்றின் மூலம் மது அருந்துதல் மூலம் தன் கவலைகளை மடைமாற்றம் செய்து கொள்கின்றனர் என்று குறிப்பிடுவதைக் காணமுடிகிறது.

## முடிவுரை

தொல்காப்பியத்தில் மனம், கனவு, மாந்தர்களின் மனநிலை போன்றவை கூறப்பட்டுள்ளன. மனம்தான் மனித வாழ்வில் மிக முக்கியமான் காரணி என்பதும், மனம் பல்வேறு வகைகளில் இயங்குவதையும் அறிய முடிகிறது. சமூகம் ஏற்புப் பெறாத ஆண், பெண் உறவுகள் பெருகி வருவதையும், தனிமனித சுயநலப் போக்கினையும், அதிகார மனப்பாங்கினையும் எடுத்துரைக்கின்றன. ஆளுமைச் சிதைவும், நெறிபிறழ் நடத்தையும் ஏற்படுவதற்கு பழிவாங்கல், மதுவுண்ணல் போன்றவையே காரணமாகின்றன என்பதை இக்கட்டுரை மூலம் அறியமுடிகிறது.

## References


Jayamohan, (2016) Veyon, East Publishing House, Chennai, India

Venkataswamy Nattar N.M., (2019) Akananuru, Saradha Publishing House, Tiruchirappalli, India

Ragavaiyangar I., (2016) Kurunthokai, Saradha Publishing House, Tiruchirappalli, India.

Tamilannal, (1975) Comparison of Sangam Literature (Literary Principles), Meenakshi Bookstore, Madurai,

Seenichamy, T. (2004) Tamil Novels in Ulachitharippu, Thanjavur Tamil University, Thanjavur, India

Tholkappiyar, (1954) Bhattathikaram, Kazhagam Publication, Chennai, India



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author’s has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License